بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

இஸ்லாத்தில் தண்டனை வழங்க வேண்டுமென்ற நிலைபாடு இருக்கத்தான் செய்கின்றது. ஆனால் அத்துடன் மன்னிப்பு வழங்க வேண்டும் மற்றும் கண்டும் காணாமல் விட்டு விட வேண்டும் என்ற கட்டளையும் இருக்கின்றது. தீங்கு விளைப்பவருக்கு தண்டனை வழங்க வேண்டும். ஆனால் அந்த தண்டனையின் காரணமாக தீமை செய்கின்றவர் அல்லது இழப்பை ஏற்படுத்தக் கூடியவர், குற்றம் இழைப்போர் ஆகியோர் சீர்திருந்த வேண்டும் என்ற நோக்கம் இருக்க வேண்டும். ஆக சீர்திருத்தம் ஏற்படுவது நோக்கமாக இருந்தால் தண்டனை வழங்குவதன் காரணமாக இந்த நோக்கம் நிறைவேறி விடுமா என்பதை தண்டனை வழங்குவதற்கு முன்னரே சிந்தித்து செயல்பட வேண்டும்.

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 22.01.2016 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

وَجَزٰٓؤُا سَيِّئَةٍ سَيِّئَةٌ مِّثۡلُهَا ۚ فَمَنۡ عَفَا وَاَصۡلَحَ فَاَجۡرُهٗ عَلَى اللّٰهِ ؕ اِنَّهٗ لَا يُحِبُّ الظّٰلِمِيۡنَ பொருள்: ஒரு தீங்கிற்குரிய கூலி அதே அளவு தீங்கேயாகும். (என்பதனை அவர்கள் நினைவில் கொள்கின்றனர்) ஆனால் எவர் மன்னித்து, சீர்திருத்துகிறாரோ அவருக்குரிய நற்பலன் அல்லாஹ்விடம் உள்ளது. நிச்சயமாக அவன் அநீதி இழைப்பவர்களை நேசிப்பதில்லை. **(42:41)**

தவறான செயல் செய்வோர், சேதம் விளைவிப்போர், அது எவ்வளவு குறைவான சேதமாக இருந்தாலும் பெரிய அளவிலான சேதமாக இருந்தாலும் அல்லது எதிரியாக இருப்பினும் அத்தகைய ஒவ்வொருவருடனும் சீர்திருத்தம் ஏற்படுத்தும் அம்சம் இருக்கும் அளவில் நடந்து கொள்ளுமாறு இஸ்லாத்தின் போதனை உள்ளது. இஸ்லாத்தில் தண்டனையின் அம்சம் நிச்சயமாக இருக்கிறது என்றாலும், அத்துடன் மன்னிப்பும் கண்டும் காணாமல் நடந்து கொள்ளும் கட்டளையும் உள்ளது.

இந்த வசனத்தில் கூட நீங்கள் கேட்டதைப் போன்று இதே கட்டளை தான் உள்ளது. தீமை மற்றும் தீய செயல் செய்பவருக்கு தண்டனை வழங்குங்கள். எனினும், அந்தத் தண்டனையின் பின்னாலும் கூட அந்தத் தீய செயலைச் செய்பவர், சேதம் விளைவிப்பவர் மற்றும் குற்றவாளிகளுக்கு சீர்திருத்தம் கிடைக்க வேண்டும். அதாவது சீர்திருத்தம் நோக்கமாக இருக்கின்ற பட்சத்தில் தண்டனை தருவதற்கு முன் அந்த தண்டனையால் இந்த நோக்கம் நிறைவேறுமா என்பதை சிந்திக்க வேண்டும். சிந்தித்த பிறகும் கூட குற்றவாளிகளின் நிலைமைகளைப் பார்த்த பிறகும் கூட மன்னிப்பினால் தான் சீர்திருத்தம் ஏற்பட முடியும் எனில் மன்னித்து விடுங்கள் அல்லது தண்டனை தருவதனால் தான் சீர்திருத்தம் ஏற்பட முடியும் எனில் தண்டனை கொடுக்க வேண்டும். மன்னிப்பதும் கூட மிகச்சிறந்த கூலியைப் பெற்றுத் தரும். இறுதியில் இன்னஹு லா யுஹிப்புஸ் ஸாலிமீன் என்று கூறி தண்டனை தருவதில் எல்லை மீறுவீர்கள் எனில் நீங்கள் அநீதியிழைப்பவர்களைச் சார்ந்தவர் ஆவீர்ஒ என்பதையும் தெளிவுபடுத்தி விட்டான்.

எவ்வாறிருப்பினும், இது அடிப்படைச் சட்டமாகும். தண்டனை மற்றும் சீர்திருத்தம் பற்றி திருக்குர்ஆனில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இது நமது தனிப்பட்ட வாழ்விலும் சூழ்ந்துள்ளது. மேலும் அரசாங்க விவகாரங்களிலும் சமுதாய விவகாரங்களிலும் சர்வதேச விவகாரங்களிலும் இதுவே அடிப்படையாகும்.

ஒரு குற்றவாளிக்கு தண்டனை தருவதன் நோக்கம் நான் கூறியது போன்று சீர்திருத்தம் ஏற்படுவதும் நல்லொழுக்க மேம்பாடும் ஆகும் என்றே இஸ்லாம் கூறுகிறது. இவ்விஷயத்தைக் கண் முன் நிறுத்தியவாறு வெறும் தண்டனைக்கு மட்டுமே அழுத்தம் கொடுக்காதீர்கள். மாறாக, சீர்திருத்தத்தின் பக்கம் அழுத்தம் கொடுங்கள். மன்னிப்பதால் சீர்திருத்தம் ஏற்படும் என்று கருதினால் மன்னித்து விடுங்கள். ஆனால், சூழ்நிலைகள், தண்டனை கொடுப்பதால் மட்டுமே சீர்திருத்தம் ஏற்படும் என்று கூறினால் தண்டனை கொடுங்கள். ஆனால், தண்டனை குற்றத்திற்கு ஏற்பவே அமைய வேண்டும் என்பதை குறிப்பாக கவனத்தில் கொள்ள வேண்டும். அது அல்லாமல் குற்றத்தை விட அதிகமாக தண்டனை கொடுப்பதால் அது அநீதியும் வரம்புமீறலும் ஆகும். அநீதி மற்றும் வரம்பு மீறலை இறைவன் விரும்புவதில்லை.

எனவே, இஸ்லாத்தில் முந்தைய மார்க்கங்கள் போன்று கூடுதல் குறைவுகள் இல்லை. அதன் மிக உயரிய முன்மாதிரி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வாழ்வில் தென்படுகிறது. குற்றவாளிகளுக்கு சீர்திருத்தம் ஏற்பட்டு விட்டதைப் பார்த்த போது தமக்கு அளவில்லாத அநீதியிழைத்த பகைவர்களையும் மன்னித்து விட்டார்கள். அன்னார் மீதும் அன்னாரது சந்ததிகள் மற்றும் அன்னாரது சஹபாக்கள் மீதும் அநீதியிழைக்கப்படவில்லையா? ஆனால் எதிரிகள் மன்னிப்பை வேண்டிய போது இறைவன் மற்றும் அவனது ரஸூலுடைய கட்டளைக்கேற்ப வாழ்வை கழிக்க உறுதி கொண்ட போது அன்னார் அன்னார் எல்லாவற்றையும் மறந்து விட்டு மன்னித்து விட்டார்கள்.

ஹதீஸில் வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மகளார் ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்கள் மக்காவிலிருந்து இடம் பெயர்ந்த வேளையில் ஓர் அநீதியிழைப்பவரான ஹிபார் பின் அஸ்வத் என்பவன் ஈ ட் டி யை க் கொண்டு கொலைத் தாக்குதல் தொடுத்தான். அப்போது அவர்கள் (ஹஸ்ரத் ஸைனப்) கர்ப்பமுற்றிருந்தார்கள். தாக்குதலினால் அவர்களுக்கு காயமும் ஏற்பட்டது. அன்னாரின் கர்ப்பமும் கலைந்தது. இறுதியில் அந்தக் காயமே அவர்களின்

உயிரை எடுக்கும் காயமாக ஆகி விட்டது. இந்தக் குற்றத்திற்காக அந்த கொலைகாரனுக்கு தண்டனை தருவதாக தீர்ப்பானது. ஆனால் அன்னாரின் மன்னிக்கும் பண்பு எவ்வளவு பரந்ததாக இருந்தது எனில் அன்னார் தமது மகளாரின் கொலைகாரனைக் கூட மன்னித்தார்கள். ஹிபார்! செல்! உம்மீது அல்லாஹ் கருணை காட்டி விட்டான். அவன் உமக்கு இஸ்லாத்தை ஏற்க வாய்ப்பு வழங்கினான். உண்மையான தவ்பா செய்வதற்கு வாய்ப்பளித்துள்ளான் என்று கூறினார்கள்.

இதுபோன்று கஅப் பின் ஸுஹிர் என்பவன். இவன் முஸ்லிம் பெண்களைப் பற்றி அசுத்தமான கவிதையை இயற்றி வந்தான். அவர்களின் கண்ணியத்தின் மீது தாக்குதல் தொடுத்து வந்தான். அவனுக்கும் தண்டனை வழங்குவதற்கு தீர்ப்பாகி இருந்தது. மக்கா வெற்றி கிடைத்த போது கஅப் உடைய சகோதரர், மக்கா வெற்றி பெற்று விட்டது. நீர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சென்று மன்னிப்பு கேட்பது சிறந்தது என்று அவனுக்கு கடிதம் எழுதினார். இந்த வகையில் அவர் மதீனாவுக்கு வந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் மன்னிப்பு வேண்டிய போது அன்னார் மிகுந்த பரிவுடன் அவரை மன்னித்து விட்டார்கள்.

பிறகு அவர் ஒரு கவிதை ஒன்றை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன் எடுத்து வைத்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓர் அழகிய போர்வை ஒன்றை அவருக்கு வெகுமதியாக வழங்கினார்கள். ஆக, தண்டனைக்காக தீர்ப்பளிக்கப்பட்ட ஒரு பகைவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் உயிர் பிழைப்பதற்காக சென்றார். ஆனால் வெகுமதியும் கூட பெற்றவராகத் திரும்பினார். இதுபோன்று நிறைய சம்பவங்கள் அன்னாரின் வாழ்வில் கிடைக்கின்றன.

அன்னார் சீர்திருத்தம் ஏற்பட்டு விட்டால் தமது சொந்த பகைவர்களையும் கூட மன்னித்து விட்டார்கள். தமது நெருங்கிய சொந்தங்களின் எதிரிகளையும் கூட மன்னித்தார்கள். மேலும் இஸ்லாத்தின் எதிரிகளையும் கூட மன்னித்தார்கள். ஆனால் சீர்திருத்தத்திற்கு தண்டனை தருவது அவசியமான இடங்களில் தண்டனை தேவைப்படும்போது தண்டிக்கவும் செய்தார்கள். இந்த முக்கியமான கட்டளையின் அசல் நோக்கம் சீர்திருத்தம் செய்வதாகவே இருந்ததே அன்றி பழிவாங்குவதாக இருந்ததில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அஷ் ஷுஅராவின் 41 –வது வசனமாகிய இதனை தமது நூல்களிலும் வழிகாட்டல்களிலும் பல இடங்களில் தெளிவுபடுத்தியுள்ளார்கள். அன்னார் தமது 13 நூல்களில் அதனை விட அதிகமாகக் கூட இருக்கலாம். இதற்காக சான்றுகள் தென்படுகின்றன. அவற்றுள் 21–22 இடங்களில் பல்வேறு இடங்களில் இது சம்பந்தமாக கூறியுள்ளார்கள். அதுபோன்று தமது சபைகளிலும் பல இடங்களில் இதனைக் கூறியுள்ளார்கள்.

இஸ்லாமிய போதனைகளின் தத்துவஞானம் என்ற நூலில் தண்டனை – மன்னிப்பு சம்பந்தமான தத்துவம் மற்றும் ஆன்மாவைக் குறிப்பிட்டவாறு கூறினார்கள்: தீமைக்கான தண்டனை அதனைப் போன்ற அளவே இருக்க வேண்டும். ஆனால் ஒருவர் பாவத்தை மன்னித்து விட்டால் அதுவும் மன்னிப்பினால் சீர்திருத்தம் ஏற்படும் என்ற நிலையில் மன்னிப்பார் எனில், அதனால் எந்தத் தீய விளைவும் ஏற்படாது எனில் அதாவது மன்னிப்பிற்கான சரியான இடத்தில் செய்திருப்பார் எனில் அதற்கான பலனைப் பெறுவார். அதாவது மன்னிப்பவர் அல்லாஹ்விடத்தில் நற்கூலியைப் பெறுவார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: என்ன நேர்ந்தாலும் எல்லா இடத்திலும் தீமையை எதிர்க்கவே கூடாது என்பது திருக்குர்ஆனின் போதனை அல்ல என்பது வெளிப்படையாகும். சில இடங்களில் தீமையை எதிர்க்க வேண்டியது வருகிறது. விஷமிகள் மற்றும் அநீதியிழைப்பவர்களுக்கு தண்டனை தரப்பட்ட வேண்டும். மாறாக, போதனையாவது, அந்த சூழ்நிலையும் இடமும் அந்தப் பாவத்தை மன்னிக்க வேண்டியதற்குரியதா? அல்லது தண்டனை கொடுக்க வேண்டியதா? என்று பார்க்க வேண்டும். ஆகவே, குற்றவாளியின் தரப்பில் அல்லது பொதுமக்கள் தரப்பில் யதார்த்தத்தில் எது சிறந்ததோ அதனை மேற்கொள்ள வேண்டும்.

இக்காலத்தில் சிலர் இஸ்லாமிய உரிமையின் கொடியை ஏந்தியவர்களாகத் திரிபவர்கள் ஒருபுறம் போய் விட்டனர். ஒருவருடைய குற்றம் எவ்வளவு தான் பெரியதாக இருப்பினும் மனிதாபிமானம் என்ற பெயரில் குற்றவாளிகளுக்கு எவ்வளவு சுதந்திரம், ஆதரவு தரப்படுகிறது எனில், அநேக குற்றவாளிகளுக்கு அவரது குற்றத்தின் உணர்வே அவர்களை விட்டு அழிந்து விட்டது. கொலைகாரர்கள் கொலையைத் தொழிலாகக் கொண்டவர்கள் அல்லது அகம்பாவம் மற்றும் பெருமையில் தம்மைத் தவிர வேறு எவரது வாழ்வின் முக்கியத்துவமும் தென்படாத அளவுக்கு இருப்பவர்களான அத்தகையோருக்கு கொலையுண்டவரின் வாரிசுதாரர்கள் அவரை மன்னித்தால் தவிர அவருக்கு மரண தண்டனையே கொடுக்க வேண்டும்.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: குற்றவாளியின் தரப்பிற்கு எது சிறந்தது? என்று மட்டும் பார்க்கக் கூடாது. சில வேளைகளில் குற்றவாளிகளை மட்டுமே கருத்தில் கொள்ளப்படுவதையும் பார்க்கிறோம். பொதுமக்களுக்கு எது சிறந்தது? என்றும் பார்க்க வேண்டும். பெரிய ஒன்றிற்காக சிறியதை தியாகம் செய்வது அல்லது சமூகத்தின் பரந்துபட்ட பயனை கவனத்தில் கொள்வதும் கூட சில வேளைகளில் அவசியமாகும். எனவே எந்தவொரு தண்டனையின் தீர்ப்பின் வேளையிலும், சமுதாயத்தில் ஒட்டுமொத்த அளவில் இதனால் என்ன தாக்கம்? ஏற்படும் என்பதையும் பார்க்க வேண்டும். சில வேளையில் மன்னிப்பது சமூகத்தில் தவறான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

பாருங்கள்! இவ்வளவு பெரிய குற்றவாளி ஒரு தவறான வேலை செய்து விட்டு தப்பித்து விட்டான் என்று கூறப்படும். பிறகு தீய இயல்பை உடையவர்கள் நாமும் கூட தவறான செயலைச் செய்து விட்டு மன்னிப்புக் கேட்டு தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைக்கின்றனர். பிறகு இந்த நிலை குற்றவாளிகளுக்கு தவறு செய்வதற்கான துணிச்சலைக் கொடுத்து விடுகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இஸ்லாத்தின் அழகிய போதனையை தவ்ராத் மற்றும் இஞ்சிலின் போதனையுடன் ஒப்பிட்டுக் கூறுகின்றார்கள்: இஞ்சீலில் எழுதப்பட்டுள்ளது. ‘நீ தீமைக்கு எதிராக இருக்காதே!’ சுருக்கமாக இஞ்சீலின் போதனை குறைவின் பக்கம் குனிந்துள்ளது. சிறப்பான சூழ்நிலைகளின் கீழ் அல்லாமல் மனிதன் இதன்படி செயல்படவே

முடியாது. இன்னொருபுறம் தவ்ராத்தின் போதனைகளைப் பார்த்தால் அது கூடுதலின் பக்கம் குனிந்துள்ளது. இதிலும் ஒரேயோர் அம்சத்தின் பக்கம் அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. 'உயிருக்கு உயிர்; கண்ணுக்கு கண்; காதுக்கு காது; பல்லுக்குப் பல் உடைத்து விட வேண்டும்' என்கிறது. இதில் மன்னிப்பு மற்றும் கண்டுங்காணாமையில் பெயர் கூட இல்லை.

ஆனால், திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. எவ்வளவு தீங்கு செய்யப்பட்டுள்ளதோ அதே அளவு தண்டனை கொடுப்பது அனுமதிககப்பட்டுள்ளது. ஆனால் எவராவது மன்னித்து விடுவார் என்றால் அந்த மன்னிப்பில் சீர்திருத்தம் கவனத்தில் கொள்ளப்படும் என்றால் இடம், சூழலுக்கு பொருந்தாததாக அது இல்லாத பட்சத்தில் இன்னும் சொல்வதாயின், சரியான இடத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் என்றால் அத்தகைய மன்னிப்பை கொடுப்பவருக்காக அவரது இறைவனிடமிருந்து அவருக்கு கூலி கிடைக்கும். பாருங்கள்! இது எத்தகைய தூய போதனையாக உள்ளது. இதில் கூடுதலும் குறைவும் இல்லை. பழிவாங்குதலுக்கு அனுமதி உண்டு. ஆனால் மன்னிப்பிற்கான வலியுறுத்தலும் உள்ளது. பழிவாங்குவதற்கான கட்டளையும் உள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு பிரிவினர் மன்னிக்கவே தெரியாத தலைவர்களாக இருக்கின்றனர். முன்னரே கூறப்பட்டது போன்று, பாட்டனாரின் பாட்டனார் காலத்தின் மனத்தாங்கல்களையும் நினைவில் வைத்திருக்கின்றனர். இன்னொருபுறம் எத்தகைய தன்மானமற்ற மக்களாக இருக்கின்றனர் என்றால் நேர்வழியில் நடப்பதில் ஒரு கறை ஏற்படும் அளவுக்கு மன்னிப்பின் பெயரில் தன்மானமின்மையைக் காட்டுகின்றனர்.

எனவே, தன்மானமின்மையும் கூடாது. அநீதியும் செய்யக் கூடாது. ஒருவர் ஒருவரது மகள் மற்றும் சகோதரி மீது தாக்குதல் தொடுக்கிறார் என்றால், சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்கு மன்னிப்பிற்கான கேள்வி இல்லை. மன்னிப்பு மற்றும் தன்மானமின்மைக்கு இடையிலுள்ள வித்தியாசத்தை உணர முயற்சி செய்ய வேண்டும். ஆனால் சட்டத்தை கையில் எடுக்கக் கூடாது என்பது நிபந்தனையாகும்.

நான் ஏற்கனவே கூறியது போன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பல இடங்களில் இது சம்பந்தமாக விளக்கிக் கூறியுள்ளார்கள். அன்னாரது மேலும் சில மேற்கோள்களை எடுத்து வைக்கிறேன். ஆதாரம் இல்லாமல் மேற்கோள்களைப் பார்க்கும் போது ஒரே கருத்து தான் தெரிகிறது. ஆனால் ஒவ்வோரிடத்திலும் அன்னார் எடுத்துக் கூறியுள்ளவற்றில் பல்வேறு கோணத்தில் பல்வேறு வகையான போதனைகளாக உள்ளன.

ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: தீமைக்கு தண்டனை அதனைப் போன்ற அளவுக்கே செய்ய வேண்டும். ஒருவர் மன்னித்து விட்டால் அதனால் சீர்திருத்தம் ஏற்படும் எனில், அதனால் தீமை விளையாது எனில், இறைவன் அதனைக் கொண்டு திருப்தி அடைகிறான். அதற்கு அவன் நற்கூலி வழங்கவான். திருக்குர்ஆனின் அடிப்படையில் ஒவ்வோர் சந்தர்ப்பத்திலும் பழிவாங்கவே செய்ய வேண்டும் என்பதல்ல. எல்லா இடத்திலும் பழிவாங்குவதும் பாராட்டத்தக்கதல்ல. எல்லா இடத்திலும் மன்னிப்பதும் பாராட்டத்தக்கதல்ல. மாறாக, பழிவாங்கல், மன்னிப்பு ஆகியவை இடம், சூழலைப் பொருத்து செய்ய வேண்டுமே ஒழிய எந்த வரையறைக்கும் உட்படாத வகையில் அல்ல. இதுவே திருக்குர்ஆனின் போதனையாகும்.

கூறுகின்றார்கள்: ஒருவரது நிய்யத் நன்றாக இருந்தால் இறைவன் ஒரு மனிதரிடம் திருப்தி அடைகிறான். அவரது செயல் நோக்கம் சீர்திருத்தமாக இருக்கிறது. நன்மையின் சாயலே இல்லாத மனிதர் மன்னிப்பதால் இறைவன் திருப்தி அடைவதில்லை அல்லது பழிவாங்கம் எண்ணத்தில் தண்டனை தருபவரிடமும் இறைவன் திருப்தி அடைவதில்லை. இந்த விஷயத்தையும் முன்னிறுத்த வேண்டும். தன்மானம் இல்லாமல் போகும் அளவுக்கு மென்மையும் கூடாது. அதிலும் அல்லாஹ் திருப்தி அடைவதில்லை அல்லது பழிவாங்கும் எண்ணம் கொண்டவரிடமும் இறைவன் திருப்தி அடைவதில்லை. அல்லாஹ் அவருடன் கோபம் கொள்கிறான். எனவே இந்த இரு எல்லைகளையும் முன்னிறுத்தியவாறு மன்னிப்பு மற்றும் தண்டனைக்கான முடிவு எடுக்க வேண்டும்.

இது சம்பந்தமாக ஜமாஅத்தின் பொறுப்பாளர்களும் கவனத்தில் கொள்ள வேண்டும். பொதுவாக கவனத்தில் கொள்ளப்படுகிறது என்றாலும் சிலருக்கு எதிராக தீர்ப்பாகி விட்டாலோ பரிந்துரை செய்யப்பட்டாலோ பழிவாங்கும் எண்ணத்தில் தான் செய்யப்படுகிறது என்று நான் கூறவில்லை. ஆனால் நிச்சயமாக சில வேளைகளில் பரிந்துரை செய்பவரின் கவனம் இயல்பாகவே கடுமை காட்டுவதன் பக்கம் செல்கிறது. சிலர் அளவுக்கு அதிகமான மென்மை மற்றும் மன்னிப்பின் மீது கவனம் செலுத்துகின்றனர். இதனாலும் பிறகு தீமை விளைகிறது. எனவே தண்டனை வழங்குவதும் திருப்திகரமானதல்ல. மன்னிப்பதும் பாராட்டத்தக்கதல்ல. அசல் விஷயம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதேயாகும். சீர்திருத்தம் நோக்கமாக இருக்கும் போதுதான் அது கிடைக்கிறது. அதற்காக சம்பந்தப்பட்ட துறை முயற்சி செய்ய வேண்டும். அது உமூரே ஆமாவாக இருக்கட்டும்; கஸாவாக இருக்கட்டும். மிகவும் ஆழத்திற்கு சென்று பரிந்துரை செய்ய வேண்டும் அல்லது தீர்ப்பு வழங்க வேண்டும். அதன் மூலமே உண்மையானஅமைப்பு நமக்குள் –ஜமாஅத்திற்குள் உருவாக முடியும். அதுவே இறைவனது திருப்தியைப் பெற்றுத் தரும். அதற்காக இறைவனிடம் துஆவுடன் உதவி கேட்பதும் அவசியமாகும். என்ன முடிவு எடுத்தாலும் துஆவுடன் எடுக்க வேண்டும். பிறகு காலத்தின் கலீஃபவுக்கு பரிந்துரை செய்ய வேண்டும். அதன் மூலம் எல்லா வகையான தீய தாக்கத்திலிருந்தும் அவரும் சரி, யாருக்கு எதிரா புகார் செய்யப்படுகிறதோ அவரும் சரி, மேலும் ஜமாஅத் அமைப்பும் சரி பாதுகாப்பாக இருக்க வேண்டும். ஜமாஅத்தின் எந்தவொரு தீர்ப்பும் நிம்மதியின்மைக்குக் காரணமாக ஆகாமலும் இருக்கும்.

இதுபோன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது நஸீமே தஃவத் என்ற நூலில் இதே கருத்தை எடுத்துக் கூறியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: இஸ்லாத்தின் எதிரிகள், ஆட்சேபனையாளர்கள் இஸ்லாமிய போதனை பற்றி

நன்றாக தெரிந்திருக்க வேண்டும். இதுபோன்ற போதனை வேறெந்த ஒரு மார்க்கத்திலும் இல்லை என்பதை விளக்கிக் கூறுகிறார்கள். எவராவது உங்களுக்கு துக்கம் தந்தால் உதாரணமாக பல்லை உடைத்து விட்டால், கண்ணை குத்தி விட்டால் அவருக்கு அதே அளவு தண்டனை தர வேண்டும். இந்நிலையில் அவரது பாவத்தை மன்னித்தால் – அந்த மன்னிப்பால் நல்விளைவு ஏற்படும் என்றால் அதனால் சீர்திருத்தம் ஏற்பட முடியும் என்றால் உதாரணமாக, ஒரு குற்றவாளி வருங்காலத்தில் அதிலிருந்து திரும்பி வருகிறார் எனில் சீர்திருத்தம் ஏற்படும் எனில் மன்னிப்பதே சிறந்ததாகும். அந்த மன்னிப்பினால் இறைவனிடமிருந்து நற்கூலி கிடைக்கும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: குளிர் மற்றும் கோடை காலத்தில் உடைகளையும் மாற்றிக் கொண்டேயிருக்கிறோம். அதுபோன்று நமது நல்லொழுக்க நிலையும் மாற்றத்தை விரும்புகிறது. எவ்வாறு உணவு சூழ்நிலைக்கேற்ப மாறுகிறதோ அதுபோன்று அல்லாஹ் பருவ நிலைக்கேற்பவே உணவுகளையும் உருவாக்குகிறான். அதுபோன்று தட்ப வெப்ப சூழ்நிலைக்கேற்ப ஆடைகளையும் மாற்ற வேண்டியதிருக்கிறது. இந்த அனைத்தும் இயற்கைச் சட்டத்திற்கேற்பவேயாகும். அதுபோன்று நமது நல்லொழுக்க நிலையும் சூழ்நிலைக்கேற்ப மாறுதலை எதிர்பார்க்கிறது.

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இதுபோன்று சூழ்நிலைக்கேற்ப நமது நல்லொழுக்க நிலைகளும் மாற்றத்தை விரும்புகிறது. ஒரு வேளையில், மக்களிடம் திகிலை ஏற்படுத்துவதற்குரிய இடமாக இருக்கிறது. அங்கு மென்மை, கண்டும் காணாமல் இருப்பதால் பணி குழம்பி விடுகிறது. சில காலம் மென்மையின் காலமாக இருக்கிறது. அங்கு திகிலைக் காட்டுவது பொருத்தமற்றதாக ஆகி விடுகிறது.

சுருக்கமாக, ஒவ்வொரு காலமும் இடமும் ஒரு விஷயத்தை விரும்புகிறது. எவர் சூழ்நிலையின் தேவையை கருத்தில் கொள்வதில்லையோ அவர் மிருகமாவார்; மனிதல்ல. அவர் காட்டுமிராண்டி, நாகரீகமான மனிதன் அல்ல.

பிறகு இன்னோரிடத்தில் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் பயனற்ற மென்மை மற்றும் கண்டும் காணாமையை தரவில்லை. இதனால் மனித நல்லொழுக்கம் தடம் புரண்டு விடுகிறது. முழு அமைப்புமே சிதைந்து போகிறது. மாறாக, ஒருவர் சீர்திருந்தத்தக்க மன்னிப்பு வழங்கப்பட வேண்டும். மன்னிப்பும் கண்டும் காணாமையும் காரணமில்லாமல் செய்யப்பட்டால் அமைப்பே சிதைந்து போய் விடும்.

ஒவ்வொருவரும் தமது அன்றாட விவகாரங்களில் தமக்கிடையிலுள்ள தொடர்புகளில் ஆய்வு செய்ய வேண்டும். தாம் பிறரைப் பற்றி என்ன சிந்திக்கிறோம் என்றும் தம்மைப் பற்றி என்ன சிந்திக்கிறோம் என்பது பற்றியும் ஆய்வு செய்ய வேண்டும். இதனால் சமுதாயத்தில் ஓர் அழகு உருவாகிறது. எனவே அவ்விஷயம் இதுவாகும். எப்போதும் இதனை நினைவில் கொள்ள வேண்டும். ஒவ்வொரு செயலும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக இருக்க வேண்டும். இது நடந்தால் சீர்திருத்தம் ஏற்படும்.

இந்த இரண்டு விஷயங்களை நாம் நினைவில் கொள்ள வேண்டும். காரணம், நாம் சீர்திருத்தி தீமைகளைத் தடுக்க வேண்டும். சமுதாயத்தில் அமைதியை உருவாக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனை திருப்திப்படுத்த வேண்டும். ஏனெனில் அவன் அநீதியிழைப்பவர்களை விரும்புவதில்லை. அல்லாஹ் நமக்கு திருக்குர்ஆனின் போதனைகளை புரியவும் செயல்படவும் வாய்ப்பளிப்பானாக!

தொழுகைக்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் 2016 ஆம் ஆண்டு ஜனவரி 11 ஆம் தேதியன்று இரவில் ரப்வாவில் ஷஹீதான கண்ணியத்திற்குரிய பிலால் மஹ்மூது சாஹிப் அவர்களுடைய ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைத்தார்கள்.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 22.01.2016
Tamil Translation : Muallim. Nizamuddin Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516